26. உமறு புலவர் நதியின் பெருக்கெடுப்பு பற்றிக் கூறுவன யாவை ?

*Ans.* :

பெருக்கெடுத்து வந்த ஆறு குறிஞ்சி நிலத் திரவியங்களை எல்லாம் தனது அலைக் கரங்களால் அள்ளிக் கொண்டு வந்து தூதர் முகமது அவர்களின் பாதங்களில் தூற்றியது.

27. நாய் மற்றும் பாம்பின் இயல்புகளாக ஆசிரியர் கூறுவன யாவை ?

*Ans.* :

வாலை ஒட்ட நறுக்கினாலும், நாயின் நன்றி காட்டும் இயல்பு மாறாது. பால் வார்த்தாலும், பாம்பு தன் விஷத்தைக் குறைக்காத இயல்புடையது.

28. யந்திர மனிதர்களால் உண்டாகும் தீமைகள் யாவை ?

*Ans.* :

பரிட்சைகள் பெருகும், தந்திரங்கள் வளரும். சட்டங்கள் விரியும். போர்கள் மல்கும். தொல்லைகள் ஓங்கும்.

29. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

*Ans.* :

இறந்த காலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால். ஆனால் இறந்தகாலம் தாஜ்மஹா ன் மேல் வாழ்ந்து கொண்டு இருக்கிறது.

திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன்தான். ஆனால் இன்னும் இறந்துவிடவில்லை.

30. தமிழ் விடுகதைகளை வெளியிட்டு ஊக்குவித்த இதழ்கள் நான்கினைக் குறிப்பிடுக.

*Ans.* :

விவேக சிந்தாமணி, கலா சிந்தாமணி, ஜனவிநோதினி, செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், தாமரை, ராணி, அரும்பு, தமிழரசு, கொங்கு.

31. சொற்பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன ?

*Ans.* :

வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து அதே பொருளைத் தருமானால் அது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

32. அடுக்குத் தொடர் என்றால் என்ன ?

*Ans.* :

ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும்.

**III. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $11 \times 3 = 33$**

33. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

*Ans.* :

அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவனது தலைமை, ஒழுக்கம் இல்லாதவனது தவம், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவனது அழகு.

34. அனுமன் கையி ருந்த மோதிரத்தை வாங்கியதும் சீதை அடைந்த நிலை யாது ?

*Ans.* :

ஒரு சொல்லும் சொல்லவில்லை, இளைத்திருந்த உடல் பூரித்தாள். தனக்குள்ளேயே வியப்படைந்தாள். மோதிரத்தைக் கண்ட கண்கள் இமைக்கவில்லை.

35. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரிடும் ?

*Ans.* :

பதினேழாவது வயதி ருந்து இருபத்து நான்காவது வயதிற்குள் உனது திசை எதுவென்பதைத் தீர்மானிக்காவிட்டால், பாறையில் மோதிய பந்தாய் திரும்பிவர நேரும்.

36. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை எழுதுக.

*Ans.* :

பனிக்கட்டிகள் உருகும்.

கடல் மட்டம் உயரும்.

பல தீவுகள் மூழ்கும்.

37. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

*Ans.* :

ஒரு சொல்லோ, தொடரோ, இரண்டு பொருள் தருமாறு பாடப் பெறுவது இரட்டுற மொழிதல் ஆகும்.

38. நாமக்கல் கவிஞர் என்னுடைய நாடு என்ற கவிதையில் கூறும் கருத்துகள் குறித்து எழுதுக.

*Ans.* :

இந்திய நாடு என்னுடைய நாடு என்று தினந்தோறும் பாடு.

வந்தவர்கள் போனவர்கள் யாவரையும் நம்பி வாடியது போதும்.

39. பாரதிதாசன் கடுகு உள்ளம் கொண்டவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார் ?

*Ans.* :

தான் உண்டு தன் வேலை உண்டு என்று மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்காமல், தன் மனைவி, தன் மக்கள் என்ற தன்னல உணர்வுடன் வாழ்வோர் கடுகு உள்ளம் கொண்டவர்கள்.

**இடம் சுட்டிப் பொருள் விளக்குக:**

40. "பட்டினிகிட பலாவையே உண்பது என்று"

*Ans.* :

இடம் : இன்றைய களாவும் நாளைய பலாவும்

விளக்கம் : களா போதுமென்றால் அதுதான் இறுதிவரை. பலா கனாதான். முயற்சி செய். பட்டினி கிட பலாவையே உண்பதென்று.

52. அறிவின் மறுபெயர், இரவில் வருவது அது என்ன ?

*Ans.* :

(B) மதி

53. பாமர மக்களின் பழமை மொழி .............................. .

*Ans.* :

(C) பழமொழி

54. அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய் காய்க்கும்

- இதில் அமைந்துள்ள தொடை ........................................ .

*Ans.* :

(A) மோனை

55. "மனுஷங்கிட்டேயிருந்து பூமியைக் காப்பாத்தறது எப்படி ?" இது ........................................ .

*Ans.* :

(A) வினாத் தொடர்

56. "வகுப்பு சிரித்தது" இது ........................................ .

*Ans.* :

(B) இடவாகு பெயர்

57. மலையும் மலை சார்ந்த இடமும் ........................................ .

*Ans.* :

(D) குறிஞ்சி

58. 'வெப்சைட்' - என்பதன் தமிழாக்கம் ........................................ .

*Ans.* :

(A) வலைத்தளம்.

**VIII. தொடர்புபடுத்தி எழுதுக:** **$4 \times 1 = 4$**

59. தீதீதீ : அடுக்குத் தொடர்

தரதர : .................................................. .

*Ans.* :

இரட்டைக்கிளவி

